# தஞ்சையில் இந்தி எதிர்ப்புக் கூட்டங்கள்

(ஒரு நிருபர்)

தஞ்சை, ஜூலை 22

இம்மாதம் 16-7-38 மாலையில் தஞ்சை கரந்தை நாயர் சதுக்கத்தில் தோழர் தமிழ் வித்வான் வெள்ளை வாரணம் தலைமையில் இந்தி எதிர்ப்பு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கும்பகோணம் தோழர் ஜி. சுப்பிரமணியம் தேசிய இயக்கத்தால் நேரும் தீங்குகளைப்பற்றி பேசினார். திருநெல்வேலி தோழர் எம். க. குப்தா அவர்கள் "இந்தியும் தமிழும்" எனும் விஷயமாகப் பேசினார்கள். கும்பகோணம் தோழர் என். வ. ஜூப் அவர்களும் பேசினார். தலைவர் வந்தனோபசாரம் கூற கூட்டம் கலைவுற்றது.